சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 29.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 102/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | சிவானந்தம் |
| தந்தை பெயர் | : | மணியன் |
| கிராமம் | : | பெரிய சிங்களாந்தி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | அரசு ஊழியர் |
| வயது | : | 42 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 1, 2, 4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தஞ்சாவூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 1 எதிரி ஆறு (எ) சரவணகுமார், 2 ம் எதிரி கார்த்திகேயன், 6 ம் எதிரி சுப்பிரமணியன் ஆகியோர்களை தெரியும், அ.சா-1 கார்த்திகேயன் என்பவரை தெரியும். அவர் உள்ளூர் காரார். அ.சா-1 க்கும் எதிரிகளுக்கும் கடந்த 30.06.2011 ஆம் தேதி அ.சா-2 தனபால் என்பவர் வீட்டிற்கு அருகே சண்டை நடந்தது. அது சம்மந்தமாக போலீசார் விசாரிக்க வந்தார்கள். சண்டை நடந்த இடம் எனக்கு தெரியுமா என்று கேட்டார்கள் தெரியும் என்று

சொன்னேன். போலீசார் என்னையும், அ.சா-8 அண்ணாதுரை என்பவரையும் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். நான் சரி என்று சொன்னேன். அவர்காக எழுதிக்கொண்ட ஒரு பேப்பரில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். இந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் நடந்த விவரம் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா-2 தனபால் வீட்டிற்கு யார் யார் வந்தார்கள் என்ன வண்டியில் வந்தார்கள் தெரியுமா என்றால் தெரியும். ஸ்கார்பியோ காரில் 1ம் எதிரி சரவணன் வந்தார். மீதி வந்தவர்களின் பெயர் எனக்கு தெரியாது. 1ம் எதிரியின் காரின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. அ.சா-1 கார்த்திகேயன் என்பருடன் சேர்ந்து நீதிமன்றத்திற்கு வந்தேன் என்று சொன்னால் ஆமாம். நான் கையெழுத்து செய்த பார்வை மகஜரில் என்ன எழுதி இருந்தது என்பது எனக்கு தெரியது என்று சொன்னால் என்ன எழுதி இருந்தது என்று நியாபகம் இல்லை. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும், அ.சா-1 எனது ஊரை சேர்ந்தவர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த
நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு
செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம்
படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என்
முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.29 17:42:17 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.